**ஹங்குரங்கெத்த பிரதேச சபை**

**நுவரெலியா மாவட்டம்**

---------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 08 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 25 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து ஹங்குரங்கெத்த பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்குரியதாக கிடைக்க வேண்டிய ரூபா 1,307,550 ஆன முத்திரைக் கட்டணங்கள் ரூபா 2,615,100 என கடன்பட்டோருக்கு வரவு வைக்கப்பட்டதை சீராக்கம் செய்வதற்காக கடன்பட்டோர் ரூபா 1,307,550 செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அத்தொகை கடன்கொடுத்தோருக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே முன்னைய ஆண்டிற்கு உரித்தாக கிடைத்திருந்த ரூபா 46,000 முத்திரைக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் வருமானத்திற்கு தவறுதலாக செலவு வைத்ததை சீராக்குவதற்கு அப் பெறுமானத்தால் மீளாய்வாண்டின் வருமானம் வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 92,000 வரவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே பணமாக கிடைத்திருந்த ரூபா 46,000 முத்திரைக் கட்டணங்கள் தவறுதலாக கடன்பட்டோருக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் ரூபா 1,307,550 கூடுதலாகவும் ஆண்டின்

வருமானம் ரூபா 46,000 குறைத்தும் கடன்பட்டோர் ரூபா 1,201,550 கூடுதலாகவும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்குரியதாக நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 29,834 கூடுதலாக வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டமையால் அதனை சீராக்குவதற்காக அப் பெறுமானத்தினால் ஆண்டின் வருமானம் வரவு வைக்கப்பட்டு கடன்பட்டோர் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் ஆண்டின் வருமானம் ரூபா 59,656 தொகை வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியம் ரூபா 59,656 செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டின் வருமானம் ரூபா 29,822 குறைத்தும் திரண்ட நிதி ரூபா 29,822 ஆல் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 11,915,631 ஆக இருந்த போதிலும், அது ரூபா 11,538,053 என ரூபா 377,578 தொகை குறைத்து ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நானாவித வைப்புக்கள் மீதி ரூபா 2,907,794 ஆக இருந்த போதிலும், அது ரூபா 11,160,432 என ரூபா 1,747,362 தொகை குறைத்து ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மற்றும் வரி மீதி ரூபா 4,613,842 ஆக இருந்த போதிலும், அம்மீதி ரூபா 2,218,065 என ரூபா 2,395,777 குறைத்து ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

---

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடன் மீதி, ஊழியர் கடன் கணக்கின் பிரகாரம் ரூபா 1,963,757 ஆக இருந்த போதிலும், ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் அம்மீதி ரூபா 1,900,734 ஆக இருந்தமையால் ரூபா 63,023 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

---

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்மாணவேலை கடன்பட்டோர் மீதி ரூபா 43,679,766 தொகையாகக் காணப்பட்டதுடன்,

அவற்றில் ரூபா 34,362,237 தொகை ஒரு வருட காலத்தை மிகைத்து அறவிடாமல் காணப்பட்டது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 32,600,754 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 23,264,468 தொகை 01 வருட காலத்தை மிகைத்த செலுத்த வேண்டியதாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்கு விடயம் | 01 ஆண்டிற்கு குறைந்த மீதி | 01 ஆண்டிற்கு மேற்பட்ட மீதி | 31.12.2016 இல் உள்ளவாறான மொத்த மீதி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிர்மாணக் கடன்பட்டோர் | 9,231,675 | 17,985,281 | 27,216,956 |
| ஓய்வூதியப் பங்களிப்பு தொகை | 104,611 | 5,279,187 | 5,383,798 |
| | 9,336,286 | 23,264,468 | 32,600,754 |

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்த ரூபா 32,816,279 பெறுமதியான 04 கணக்கு விடயங்களின் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் 150 - 166 ஆம் பிரிவுகள் | ரூபா 6,417,784 ஆன நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(2) | ரூபா 29,600 தொகை பெறுமதியான 21 வைப்புக்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் | ஓய்வுபெற்றுள்ள/ இறந்த/ சேவையை விட்டுச் சென்றுள்ள/ இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 13 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 159,112 தொகையான கடன்மீதியை அறவீடு செய்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,962,267 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 1,872,766 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 8,089,501 தொகையான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியாக நிதி மீளாய்வு

நிதி விளைவுகளின் ரூபா 8,089,501 ஆன முன்னேற்றத்திற்கு 03 வருமான விடயங்களில் அதிகரிப்பும் ஒரு செலவின விடயத்தில் குறைவும் முக்கியமாகத் தாக்கியிருந்தன.

**2.3 வருமான நிருவாகம்**

-----------------------------------

**2.3.1 வீத வரி**

--------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மற்றும் வரி மீதி ரூபா 4,638,011 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 3,496,256 தொகை 1 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டது.

**2.3.2 வாடகை**

---------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வாடகை வருமானம் ரூபா 129,603 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 110,950 தொகை 1 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டது.

**2.3.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

-----------------------------------------------------------------------------------------------

மத்திய மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 817,220 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 6,119,700 தொகையும் கிடைக்க வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

-------------------------------------

**3.1 மூலதனச் செலவினம்**

---------------------------------------

மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் சபையின் பொது நிதியத்திலிருந்து செலவிடுவதற்கு உத்தேச மூலதனச் செலவினம் ரூபா 3,711,400 ஆக இருந்த போதிலும், உள்ளவாறான மூலதனச் செலவினம் ரூபா 813,604 ஆக இருந்தது. இதன் பிரகாரம் பாதிடப்பட்ட மூலதனச் செலவினத்தில் ரூபா 2,897,796 தொகை பயன்படாதிருந்ததுடன் அவ்வாறு பயன்படுத்தப்படாத அளவு பாதிடப்பட்ட மூலதனச் செலவினத்தின் 78% சதவீதமாக இருந்தது.

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

----------------------------------------------

(அ) 2015 ஒக்தோபர் 28 ஆந் திகதிய நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் பொதுச் சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 54,000 தொகையை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்த கட்டிட நிர்மாண அனுமதிப்பத்திரங்களில் 197 கட்டிடங்களுக்காக வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரங்களுக்குரிய கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடொன்றை நடாத்தப்பட்டோ தகைமை சான்றிதழ் வழங்கப்பட்டோ இருக்கவில்லை. இதன் காரணமாக வீதவரி கட்டணங்கள் அறவிடப்பட வேண்டிய கட்டிடங்களை இனங்காண்பதற்கு முடியாதிருந்தது.

(இ) சபைக்குரிய ஹந்தவலபிட்டிய மற்றும் அகிரிய நூலகங்கள் முறையாக பேணப்படாதிருந்ததுடன், கட்டிடங்களின் திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆயுர்வேத நிலையங்களை பராமரித்துச் செல்வது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபைக்குரிய ஹந்தவலப்பிட்டிய ஆயுர்வேத நிலையம் 08 ஆண்டுகளாக பொதுமக்கள் தேவைப்பாட்டிற்காக பயன்படுத்தாமல் மூடப்பட்டிருந்தது.

(ii) இடமேபிட்டிய ஆயுர்வேத நிலையம் முறையாக பராமரிக்கப்படாமல் இருந்ததுடன் நிலையத்தின் கட்டிடங்கள் பாதுகாப்பு வேலிகள் மற்றும் வாயிற் கதவுகள் பழுதடைந்து காணப்பட்டன. அவ்வாறே நிலையத்தின் நடவடிக்கைகளை பராமரித்துச் செல்வதற்குத் தேவையான பல்வேறு உபகரணங்களிலும் குறைபாடுகள் காணப்பட்டன.

### 3.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

(அ) சபைக்குச் சொந்தமான மோட்டார் கிரேடர் ஒன்றும் நீர் பௌசர் ஒன்றும் 2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பாவனையிலிருந்து அகற்றப்பட்டுள்ள ஹொன்டா வகையான மோட்டார் சைக்கிலொன்றும் 04 சக்கர குபோட்டடா உழவு இயந்திரமொன்றும் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

## 3.4 திண்மக்கழிவு முகாமைத்துவம்

(அ) மேனகம அஸ்பத்திய திண்மக்கழிவு முகாமைத்துவம் நிலையத்திற்கு சபை பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஹங்குரன்கெத்த, ரிகில்லகஸ்கட மற்றும் பதியபலல்ல ஆகிய நகரங்களிலிருந்து கொண்டு வரப்படும் கழிவுப் பொருட்கள் முறையாக முகாமை வெய்யப்படாமல் கழிவுப்பொருட்களிலுள்ள பொலித்தின் எரித்து அழிப்பதற்கும் உக்கக் கூடிய கழிவுகளுடன் சேர்ந்துள்ள பொலித்தீனும், அந்த உக்கும் கழிவுப்பொருட்களுடன் சேர்த்து மண் இடப்பட்டு மூடப்பட்டு வந்தது.

(ஆ) ஹேவாஹட்ட நகரில் சேரும் கழிவுப்பொருட்கள் வகைப்படுத்தாமல் நகரத்திற்கு அண்மையில் அமைந்துள்ள இடமொன்றில் வெளியேற்றப்படுவதுடன், அவை மண் இடப்பட்டு மூடப்படுவதால் மண் மற்றும் நீர் மூலங்கள் மாசடைவதற்கும் பொலித்தீன் எரிக்கப்படுவதால் வளி மாசடைதலும் இடம்பெற்று வந்தன.

(இ) 2016 யூலை 27 ஆந் திகதிய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் ‘‘வீடுகளுக்கு கொம்போஸ்ட் கூடைகள் வழங்கும் செயற்திட்டம் 2016’’ என்ற தலைப்பில் வினியோகிக்கப்பட்டுள்ள கடிதத்தின் பிரகாரம் 140 கொம்போஸ்ட் கூடைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 431,108 கிரயமான 118 கூடைகள் அதிகாரப் பிரதேசத்தின் மக்களுக்கு வழங்கப்படாமல் 2017 பெப்ரவரி 17 ஆந் திகதி வரையிலும் பிரதேச சபை வளவில் வைக்கப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கபட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவினங்கள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் இணக்கஞ் செய்யும் போது 07 வருமான விடயங்களில் 09 சதவீதம் முதல் 87 சதவீதம் வரையும் 08 செலவின விடயங்களில் 17 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றன.

| முறைமைகள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) வருமான நிர்வாகம் | சபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானங்கள் அறவிடப்படாமை. |
| (ஆ) கடன்பட்டோர்/ கடன் கொடுத்தோர் நிர்வாகம் | சபைக்கு பெறவேண்டிய பணத்தை அறவீடு செய்யாமை மற்றும் செலுத்த வேண்டிய தொகைகளை தீர்வு செய்யாமை. |
| (இ) சொத்துக்கள் கட்டுப்பாடு | சபைக்குரிய நூலகங்களும் ஆயுர்வேத நிலையங்களும் முறையாக பராமரிக்கப்படாமை |
| (ஈ) கணக்கீடு | கணக்காண்டிற்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களை கணக்கீடு செய்யும் போது பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டமை. |